# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.203/2014

வாதிகள் தரப்பு 2 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாடசாமி வா.சா.2 | | |
| த/பெ. | பவுன்ராஜன் | | |
| கிராமம் | அருப்புக்கோட்டை | தொழில் | இசேவை மையம் |
| தாலுகா | அருப்புக்கோட்டை | வயது | 50 |

---

முதல் விசாரணை 17-11-2025.

நான் இந்த வழக்கின் வாதிகள் தரப்பு 2 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) பிரதிவாதிகள் வாதிகளுடன் என்னையும் சேர்த்து அருப்புக்கோட்டை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) பிரதிவாதிகள் வாதிகளுடன் என்னையும் சேர்த்து ஸ்ரீவில்லிபுத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த கேவியட் மனு சார்வு நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதிகளின் மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1) நான் நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து கையெழுத்து செய்தேன் என்றால் ஆமாம். என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் 31.08.1981 ம் தேதியிட்ட பத்திரம் யாருக்கு யார் எழுதிக்கொடுத்தது என்றால் முத்துச்சாமி என்பவரும், அவருடைய வாரிசுகளும் என் சித்தப்பா நாகராஜனுக்கு எழுதிக்கொடுத்த பத்திரம் என சாட்சி கூறுகிறார். 7 அடிக்கு இவ்வழக்கு நடப்பதாக சாட்சி கூறுகிறார். எந்த 7 அடிக்கு வழக்கு இங்கு நடக்கிறது என்றால் படம்போட்டுதான் காண்பிக்க முடியும் என சாட்சி கூறுகிறார். 1981ம் வருட பத்திரம் நாகராஜனுக்கு எழுதிக்கொடுத்ததாக நிரூபணவாக்குமூலத்தில் உள்ளதா என்றால் தற்போது சாட்சி 1988ல் தான் என் சித்தப்பா கிரயம் வாங்கினார் என கூறுகிறார். 1981 ம் தேதிய பத்திரத்தைப்பற்றி எனக்கு நேரடியாக தெரியாது வில்லங்க சான்றின் மூலம் தெரியும் என சாட்சி கூறுகிறார். வில்லங்க சான்றிதழில் என்ன பார்த்தேன் என்றால் முத்துச்சாமி நாடார் டாக்டர் முத்துச்சாமிக்கு எழுதிக்கொடுத்ததாக இருந்தது என கூறுகிறார். 1988 பத்திரத்தை நேரடியாக பார்த்தேனா என்றால் ஆமாம்.

2) 1988ம் வருட பத்திரம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் முத்துச்சாமி வகையறா என் சித்தப்பாவிற்கு எழுதிக்கொடுத்தது. முத்துச்சாமி வகையறா யார் என்றால் எனக்குத் தெரியாது. எனக்கு 1988ம் பத்திரமே தெரியாது என்றால் சரியல்ல. தாவாச்சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் பார்த்து தான் சொல்லமுடியும் என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 167/309 என் சித்தப்பாவிற்குரியது என்னுடையது 167/312 என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்து சர்வே எண்.167/309, 167/312 ஆகியவை கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.167/309 என்பது வருவாய் ஆவணத்தில் மாடசாமி என்பவரின் பெயரில் உள்ளது என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது ஆவணத்தைப் பார்த்துதான் சொல்லமுடியும் என சாட்சி கூறுகிறார். நிரூபணவாக்குமூலத்தின் 4வது பாராவில் புதிய வாய்க்கால் பிரதிவாதிகள் கட்டியதாக சொல்லியுள்ளேன். எந்த வருடம் கட்டினார்கள் என்று எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார்.

3) 1ம் வாதி அருப்புக்கோட்டைக்கு வந்து 1ம் பிரதிவாதியின் மகன் சரவணனை பார்த்து வாய்க்காலை அப்புறப்படுத்தும்படி கேட்டதில் அளந்து பார்க்காமல் கட்டிவிட்டதால் 3 மாதங்களில் அப்புறப்படுத்திவிடுவதாக உறுதிமொழி அளித்தார் என சொல்லியுள்ளேன் எழுத்துமூலமாக

கொடுத்தாரா என்றால் எனக்குத் தெரியாது என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.128/1ல் கிரயம் வாங்கிவிட்டு தாவாச்சொத்தை கிரயம் வாங்கியதாக சொல்லி வாதிகளுடன் கூட்டாக சேர்ந்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்திற்கு மேற்கே வாதிகளுக்கு இடமே இல்லை வாதிகளுடன் எனக்குள்ள உறவுமுறையை வைத்துக்கொண்டு அவர்களுக்காக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கட்டியுள்ள வீட்டிற்கு மேற்கே வாதிகளுக்கு எந்தவித பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S
Date: 2025.11.17 13:19:51 +0530